# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.172/2019

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 09–02–2026.

பெயர் = செந்தில்குமார்

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் கு.வி.–

(1) 2ம் வாதியான என் தாயாருக்கு உடல்நிலை சரியில்லாமல் உள்ளதென நான் சொல்லியதற்கு மருத்துவச்சான்று எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். என் தாயாரை நீதிமன்ற ஆணையர் மூலம் வீட்டில் வைத்து விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்க வசதி வாய்ப்பு உள்ளதா என்றால் இல்லை. என் தாயாரை வீடியோ கான்பரன்ஸ் மூலம் விசாரிக்க நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை என் தாயாருக்கு காதுசரியாக கேட்காது, புரிதல் தன்மையும் குறைவு என சாட்சி கூறுகிறார். நீதிமன்றத்திற்கு வரவைத்து என் தாயாரை விசாரித்தால் வழக்கின் உண்மை விவரம் தெரியவரும் என்பதால்தான் அவரை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. 2ம் லக்கச்சொத்து என் தாயாருக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் கிரையப்பாத்தியம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் என் தாயார் கிரையம் பெற்றது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் அசல் எங்குள்ளது என்றால் வேறொரு வழக்கில் தாக்கல் செய்து அதனை திரும்ப பெறவில்லை என சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.1ன் அசல் வேறொரு வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தை நான் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கிற்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்பதால் நான் சொல்லவில்லை என சாட்சி கூறுகிறார்.

(2) வா.சா.ஆ.1ன் படி எங்களுக்கு தென்வடலாக 29.1/2 அடி பாத்தியம். கிழக்குபக்கம், மேற்குபக்கம் தென்வடலாக 29.1/2 அடி பாத்தியம் என சாட்சி கூறுகிறார். பிராதுடன் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் வீடு தென்வடலாக எவ்வளவு அடியில் உள்ளது, சந்து தென்வடலாக எவ்வளவு அடியில் உள்ளது என அளவுகள் குறிப்பிட்டுச்சொல்லவில்லை என்றால் சரிதான். எங்களுடைய வீடு எவ்வளவு அடியில் உள்ளது என்று அளந்துதான் சொல்லமுடியும் என சாட்சி கூறுகிறார். எங்கள் வீட்டை

அளந்து பார்க்காமல்தான் நிரூபணவாக்குமூலத்தில் 8 வது பாராவில் தென்வடல் கீழ்புறம் 29.1/2 அடி மேல்புறம் 30 அடி கிரையப்பாத்தியம் என்று வீடு தென்வடல் 26.6 அடிக்கு கட்டப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளோம் என்றால் மொத்த அளவுகள் அளந்துபார்த்தோம் வீட்டின் அளவை அளந்து பார்க்கவில்லை என சாட்சி கூறுகிறார். தாவாச்சந்தும், வீடும் சேர்ந்து தான் தென்வடல் 29.1/2 அடி என்றால் சரிதான். பிராது சொத்துவிவரத்தில் தென்வடல் 2 அடி அகலமும், கிழமேல் 46 அடி அளவும் உள்ள பொதுச்சந்து என குறிப்பிடப்பட்டுள்ளது வீட்டின் அளவுகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிராதில் 2 ம்லக்கச்சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என குறிப்பிட்டு காண்பிக்கவில்லை என்றால் சரிதான். தற்போதும் எந்த சர்வே எண்ணில் உள்ளது என காண்பிக்கவில்லை என்றால் சரிதான். தாவாச்சந்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என வேண்டுமென்றே காண்பிக்காமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(3) நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் என் வீடு சர்வே எண்.96 ல் இருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் 2 ம்லக்கச்சொத்தும் சேர்த்துதான் மேற்படி சர்வே எண்ணில் இருப்பதாக சாட்சி கூறுகிறார். சர்வே எண்.96 க்கு வடக்கே உள்ள சர்வே எண்.95 சாமிசெட்டியார் மனைவியான 2 ம் வாதி என் தாயார் ராஜலெட்சுமியின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ள அடங்கல் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்.95 ல் உள்ள சுப்பன்செட்டியார் மகன் முனியாண்டி, முனியாண்டி மனைவி ஆண்டாளம்மாள் ஆகியோர் யார் என்று எனக்குத் தெரியவில்லை. என் தாயாரின் வீட்டிற்கு பின்புறம் நடராஜன், தங்கமணியம்மாள் ஆகியோர் குடியிருக்கிறார்கள். நடராஜன், தங்கமணியம்மாள் ஆகியோர் என் தந்தைவழியில் உறவினர்கள். சர்வே எண்.95 தென்வடலாக ஒருமீட்டர் அகலம் உள்ளது என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 ல் உள்ள 2 ம்லக்கச்சொத்து சர்வே எண்.95,96 இரண்டிலும் கட்டுப்பட்டது என்றால் தெரியாது. சர்வே எண்.95,96 ல் உள்ளபடி அளவுகள் வா.சா.ஆ.1 ன் இடம் சரியாக உள்ளது என்றால் அது எனக்குத் தெரியாது. சர்வே எண்.95 லும் எங்கள் இடம் கட்டுப்பட்டுள்ளது அதனை தெரியப்படுத்தினால் 2 ம்லக்கச்சொத்து 96 க்கு வராது என்பதால் மறைக்கிறோம் என்றால் சரியல்ல. நடராஜன், தங்கமணியம்மாள் ஆகியோர் தற்போதும் இருக்கிறார்களா என்றால் காலி வீடாக உள்ளது குடியிருப்பு இல்லை.

(4) என் வீட்டின் தெற்குசுவரில் உள்ள ஜன்னல் வீட்டிற்குள்ளேயே திறந்துமூடும்படியாக உள்ளது என்றால் சரிதான். குடிநீர் குழாய் தெற்கே உள்ள சுவரை ஒட்டி செல்கிறது என்றால் சரிதான். 2ம் லக்கச்சொத்தில் எங்களுக்கு எந்த பாத்தியமும் இல்லை என்பதால்தான் ஜன்னலை வீட்டிற்குள் திறந்துமூடுமாறும், குடிநீர்குழாயை சுவரை ஒட்டி வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. பாதுகாப்பு கருதி வைத்துள்ளோம் என சாட்சி கூறுகிறார். 1987ல் என் தாயார் வீடுகட்டி விட்டார். நாங்கள் வீடுகட்டும்போது பிரதிவாதியின் இடம் காலியிடமாக இருந்தது என்றால் ஒருபகுதி வீடுகட்டியிருந்தார்கள் மீத இடம் காலியாக இருந்தது என சாட்சி கூறுகிறார். பிரதிவாதி சென்னையில் வேலை பார்த்தார் என்றால் சரியல்ல திருச்சியில் வேலை பார்த்தார். பிரதிவாதி ஊரில் இல்லாதபோது தெற்குபுற சுவரை ஒட்டி சிறிய வாய்க்கால் கட்டியுள்ளேன் என்றால் பிரதிவாதி அவருடைய இடத்தை வாங்குவதற்கு முன்பாக கட்டிவிட்டேன் என சாட்சி கூறுகிறார். பிரதிவாதி அவருடைய இடத்தை வாங்கியபிறகுதான் மேலே சொன்ன வாய்க்காலை கட்டினேன் என்றாலும், வழக்கிற்காக முன்பே கட்டியதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாய்க்கால் கட்டியதை பிரதிவாதிக்கு தெரியவந்ததும் அதனை எடுக்க சொல்லி என் தாயாரிடம் பிரதிவாதி சொன்னார் என்றால் சரியல்ல. அவ்வாறு சொன்னபோது தற்போது அதனை எடுத்துவிட்டார் சாக்கடை தேங்கும் என்றும், சிலநாட்களில் வீட்டிற்குள் பைப் அமைத்துவிட்டு அதனை எடுத்துவிடுகிறேன் என சொன்னார் என்றால் சரியல்ல.

(5) 2ம்லக்கச்சொத்தில் எவ்வித இடமும் விடாமல் பொதுச்சந்து என பாத்தியம் கோருகிறேன் என்றால் சரியல்ல. தாவா2ம் லக்கச்சொத்து சர்வே எண்.105ல் கட்டுப்பட்டது அது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பிராதில் முழுமையான விவரங்கள் சொல்லாததாலும், வா.சா.ஆ.1ல் சொத்துவிவரம் கட்டுப்படாததாலும் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. 2ம் லக்கச்சொத்துக்கும், வா.சா.ஆ.2 வீட்டுவரி ரசீதிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கையில் 2ம் லக்கச்சொத்தின் சர்வே எண்.96ல் கட்டுப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.02.09 14:46:22 +0530